உ

ஸ்ரீகுருப்யோ நம :

ஸ்ரீமஹா கணபதயே நம :

ஸ்ரீலலிதா மஹா த்ரிபுரஸுந்தர்யை நம :

# ஸ்ரீகுருப்ரகாசம்

**முதற்பகுதி** **ஆன்மீகப்பணி**

## ஸ்ரீவிநாயகர் துதி

குருவடிவாகி வந்து குவலயம் தன்னில்
திருவடிவைத்து திறமிது பொருளென....
.... தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

## ஸ்ரீகுரு வணக்கம்

யம்–ப்ரஹ்ம வேதாந்தவிதோ வதந்தி
பரம் ப்ரதானம் புருஷம் ததான்யே!
விச்வோத் கதே: காரண மீச்வரம் வா
தஸ்மை நமோ விக்ன நிவாரணாய!!

பரம்பொருளை வேதாந்த முணர்ந்தவர்கள் ப்ரஹ்மம் என்கிறார்கள். அதுபோலவே மற்றவர்கள் ப்ரதானம் என்றும், புருஷன் என்றும், அல்லது உலகத் தோற்றத்துக்குக் காரணமான ஈச்வரன் என்றும் கூறுகின்றார்கள். அவ்வாறான பரம்பொருள் தான் உபநிஷத் கூறுகின்ற ஸ்ரீகுருவாக விளங்குகிறார். அப்படிப்பட்ட குருநாதரை இந்த நூல் முட்டின்றி முடிய முதலில் வணங்குகிறேன்.

1 விமல ப்ரகாச ஆத்மானந்தம்
வேதஸ்வரூபே வாக்யானந்தம்!
ப்ரஹ்ம வித்யா ரஹஸ்யானந்தம்
மானஸ் பஜரே குஹானந்தம்!!

2 ஓம் நமோ பகவத்யை சந்த்ர சேகரமூர்த்தயே!
சச்சிதானந்த ரூபின்யை ஸ்வாத்மபோத ப்ரபூர்த்தயே!!

3 காமாக்ஷி சரணாம் போஜம் பாவயந்தம் ஸதாஹ்ருதி!
அநந்தா நந்த நாதம் தம் ஸத்குரும் சிந்தயேஸதா!!

## சுடர் 1

## ஞான வாசம் அப்படி !

குருமத்யே ஸ்திதம் விச்வம் விச்வ மத்யே ஸ்திதோ குரு!
குருவிச்வம் நமஸ் தேsஸ்து தஸ்மை ஸ்ரீகுரவே நம : !! (குருகீதை 1–.69)

குருவின் மத்தியில் உலகம் நிலைபெற்றுள்ளது உலகத்தின் மத்தியில் குரு நிலைபெற்றிருக்கிறார். குருவே உலகமாய் விளங்கும் அவருக்கு நமஸ்காரம். அப்படிப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்,

### 1. புண்ணிய பூமி

### கேரள தேசம்,

அத்வைத பரம்பரையை அவிச்சின்னமாய் தோற்றுவித்த அவதாரமூர்த்தி ஸ்ரீசங்கரபகவத்பாதர் ஜனித்த ஆன்மீக பூமி அது.

ஆதிபராசக்தியாம் பகவதி 'அம்மேநாராயணா' என்று, கூப்பிட்டவர்களின் குறைகளைத் தீர்த்து ஆட்கொள்ளும் திருத்தலம் உள்ள தேசம் அது.

அர்ச்சாவதாரமான ஸ்ரீபாலகிருஷ்ணன்–. குருவாயூரப்பனை தன் அம்ருதமயமான க்ரந்தத்தினால் தலையசைக்க வைத்த ஸ்ரீநாராயண பட்டத்ரீயின் பக்தி படர்ந்த பூப்பரப்பு அது.

இன, மத, மொழி வித்தியாச மில்லாமல் பல லக்ஷக்கணக்கான மக்களை தன்பால் ஈர்க்கும் ஸ்ரீஐயப்பன் திருக்கோயில் கொண்ட புனித பூமி அது.

ஸ்ரீவித்யா மார்க்கத்தில் ஊறி உழன்று ஆழ்முத்தாம் "கல்பஸூத்ரம்" கண்ட ஸ்ரீபரசுராமரின் தவத்தால் மந்த்ரமயமான புண்ணிய பூமி அது.

இன்றும் கூட தவச்சீலர்கள் பாமரர்கண் படாது தவம் செய்து வரும் ஞான பூமி அது.

நமது பாரத தேசம் முழுவதுமே ஞான பூமிதான் என்றாலும் கேரளத்துக்கு மந்த்ர மதிப்பு சற்று கூடுதல் தான் . மக்களைப் போல் மலையாள மொழியும் இனிமையுடையது. இதனால் தமிழும் மலையாளமும் வெகுகாலமாக கலாசாரத்திலும், கல்வியிலும், ஞானத்திலும் பரஸ்பரம் கலந்து பரம்பரை பரம்பரையாய் இணைந்து வாழுகின்றன.

## 2. மஹான்கள்

இதன் வெளிப்பாடாய் பல்வேறு காலக்கட்டங்களில் இந்த பூமியில் பல மஹான்கள் தோன்றி ஜீவர்களுக்கு வழி காட்டியுள்ளனர். அவர்களில் சிலர் சமூகத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தனர். சிலர் மக்கள் கண்ணில் படாமலேயே வாழ்ந்தனர். சிலர் உலகளாவிய அமைப்புகள் வைத்து தொண்டாற்றியுள்ளனர். சிலர் குஹைகளிலே வாழ்ந்து, காடுகளிலே சஞ்சரித்து மேலான மனோலயத்தையடைந்து பல்லாண்டுகள் ஸகஜ ஸமாதியிலே நிலைபெற்றுள்ளனர். சிலர் அஷ்டமாஸித்திகள் பெற்று உலக மாந்தருடன் விளையாடிய வண்ணம் இருந்திருக்கின்றனர். சிலர் ஆச்ரமம் அமைத்துக்கொண்டு சமூகத்தொண்டும் ஆற்றியிருக்கின்றனர். சிலர் வெளியுலகுக்குப் பைத்தியம் போல் காணப்பட்டும் தன்னுள்ளே ஆன்மஸித்தி கை வரப்பெற்றவர்களாக இருந்தனர். சிலர் சாதாரண குடும்ப வாழ்விலே ஈடுபட்டுக்கொண்டு ஆனால் தன்னளவில் ஆன்மஸித்தி –ஆன்ம சாந்தியுடன் வாழ்ந்தனர், இன்றும் வாழ்கின்றனர்.

இவ்வாறு மஹான்கள் பல்வேறு நிலைகளில் இருப்பவர்களாதலால் அவர்களை ஸாதாரணமக்களால் எளிதில் அடையாளம் காண்பது அரிது. மஹான்களுக்கு செயல்களினால் (கர்மா) ஆகும்பயன் ஏதுமில்லை. அவர்கள் ஸதா மோனத்திலேயே நிலைபெற்றவர்கள். ஆனாலும் அவர்கள் நமது நன்மைக்காகவே செயலாற்றுகிறார்கள் என்பதை "ஜகத்தின் நன்மைக் காகவே கபடமான உருவைப்பெற்று சஞ்சரிக்கிறார்கள்." என்று தோடகாஷ்டகத்தில் ஸ்ரீதோடகாசார்யர் கூறுகிறார். நமக்கு வழிகாட்டவே அவர்கள் நம்மத்தியில் வாழ்கிறார்கள். ஆன்மசித்தி கைவரப்பெற்ற அவர்களுக்கு அமைதியான ஆச்ரமவாஸமும், அல்லல் நிறைந்த சந்தைக்கடை ஸம்ஸாரமும் ஒன்றே!

சென்றது கருதார் நாளை சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெயில் நிலவாய் விண்விழுது வீழ்ந்து
பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையாய் ஒன்றும் பாரார்.
நன்றுதீது என்னார் காக்ஷிநடுவான ஜீவன்முக்தர் ...கைவல்ய நவநீதம்

கட்வாம்ல ஸவணம் திக்தமம்ருஷ்டம் மிருஷ்டமேவச
ஸமமே வசயோ புங்தேஸ ஜீவன் முக்த உச்யதே!....மஹோபநிஷத்து.

புருஷஸ்ய கர்த்ருத்வ போக்த்ருத்வ ஸுத்துக்காதி லக்ஷண சித்ததர்ம!
க்லேசருபத் வாத் பந்தோ பவதி தன்னிரோதனம் ஜீவன் முக்தி:!!
–முக்தி கோபநிஷத்து.

திகம்பரோ வாபி ச ஸாம்பரோவா த்வகம்பரோ வாபி சிதம்பரஸ்த:!
உன்மத்தவத் வாபி பாலவத்வா பிசாசவத் வாபி சரத்யவன்யாம் !!
–விவேக சூடாமணி

மேற்கண்டவாறு ஜீவன் முக்த லக்ஷணம் ச்ருதி சாஸ்தரங்களில் விளக்கம் பெற்றுள்ளது.

வேட்டைக்காரனுக்கு காட்டைக்கண்டு பயமில்லை. ஓடக்காரனுக்கு நீரைக்கண்டு பயமில்லை. ஏனெனில் அது அவனது தொழில். நாம் கண்டு மிரளும் அடர்ந்த காடு அவனுக்கு ஸ்வர்க்கம். கடமை பெரிதாகும் போது காடும் சிறிதாகிறது. கட்டாயம் என்பது பயத்தைப் போக்குகிறது. ஜனன மரணத்தை தொடர்ந்து கொடுக்கும் இந்த சம்ஸாரம் (ப்ரபஞ்சம்) நமக்குப்படமெடுக்கும் பாம்பாகத்தெரிகிறது. ஞானிகளுக்கோ இதுவெறும் பழுதைதான் இந்த அண்டசராசரங்களும் விளையாட்டுப்பொருள். ஞானரஸத்தை பருகிக்கொண்டிருக்கும் அவர்களுக்கு இந்த ப்ரபஞ்ச விஷயங்கள் மிகவும் அல்பம். இதனால் தான் அவர்களால் அதாவது "ஸ்ரீஆவுடையம்மாள்" என்னும் ஞானியைப்போன்று "ஸம்ஸாரமாகிற ஸர்ப்பம் கிட்ட இருந்தாலும் அது எனக்கு அற்பம்." என்று பாட்டுப்பாட முடிகிறது. அவர்களிடம் ஞானமகுடி உள்ளது போலும்! இத்தகைய மஹான்கள் நமது நன்மைக்காக ஸாதனையின் சிறப்பை எடுத்துக்காட்ட அவைகளைக்கூட விருப்பு வெறுப்பின்றி அனுஷ்டிக்கிறார்கள், கீதாசார்யனின் உபதேசமும் அதுதானே! ஸாதாரண லௌகீக பார்வையில் அவர்களை நம்மில் அடையாளம் கண்டு கொள்வது கடினம். அதீதமான சில செயல்பாடுகள் அவர்களையுமறியாமல் வெளிப்படும் போதுதான் நாம் இனம் காண முடிகிறது. அந்நேரம் நமக்கு நல்லுபதேசம் கிடைக்கிறது.

## 3. ஞானவாசம்

பற்றற்ற ஞானியான ஜனகனின் செயல்கள் தானாகவே வெளிப்பட்ட போதுதான் அவனது ஞானம் உலகத்தாருக்கு தெரிய வந்தது. உண்மையை ஒருபோதும் மூடி வைக்கமுடியாது. பலாச்சுளையின் மணத்தை பிறர் அறியாதவாறு மறைக்கமுடியுமா? ஏனெனின்அதன் (மணம்) வாசம் அப்படி. இதுபோல் ஞான அமிழ்தின்வாசம் அனுபவித்தவர்களுக்கு தெரியாமற் போகாது. ஞானத்தின் வாசம் அப்படி.

இவ்வாறு தான் ஸமீப காலத்தில் ஒருவாசம் (மணம்) ஸ்ரீவித்யா உபாஸனா உலகில் வீசியது. அந்த வாசத்தை நுகரவேதான் இத்தனை வாக்யங்கள் முன்னுரையாக மஹான்கள் இயல்பு பற்றி எழுதலாயிற்று. இந்த வாசத்தின் அனுபவத்தை தொடர்ந்துஅனுபவிக்கலாம். பக்தியும் மந்தரமும் இணைந்த கேரளதேசம் கிபி. 1900ம் ஆண்டு ஸ்ரீவித்யா வாசஸ்பதியாக விளங்கப்போகிற ப்ரஹ்மஸ்ரீபூஜ்ய C. V. ஸ்வாமி சாஸ்த்ரிகள் என்ற ஒருவரை ஈன்று பெருமை கொண்டது.

ரிதம்பரா ஞானவாபி

சுடர் 2

## உத்தமம் தத்வ சிந்தா

ச்வேதாம்பரம் சவேத விலேப புஷ்பம்
முக்தா விபூஷம் முதிதம் த்விநேத்ரம்!
வாமாங்க பீடஸ்தித திவ்ய சக்திம்
மந்தஸ்மிதம் பூர்ண க்ருபா நிதானம்!! –(குரு கீதை 2–5)

வெண்மையான ஆடையுடுத்தியவர், வெண்மையான புஷ்பம் அணிந்தவர், முத்துமாலையணிந்தவர். மகிழ்ச்சியோடு கூடிய இரண்டு– விழிகள் உடையவர். இடது மடியில் வீற்றியுள்ள திவ்ய சக்தியை உடையவர், பரிபூர்ண க்ருபைக்கு உறைவிடமானவர். இவர் தான் ஸத்குரு என்பவர்.

ஸ்ரீவித்யா மார்த்தாண்ட மந்த்ர சாஸ்த்ர விதாயினே!
ஸ்ரீவேங்கடதநூஜாய ஸ்வாமி சாஸ்த்ராய மங்களம்.!! ……. (ஸ்ரீகிருஷ்ணன்)

### 1. பிறப்பு:

இன்றைக்கு சுமார் 300 வருடங்களுக்கு முன்பு முறையே 45. 40 வயதுள்ள ஒரு புருஷனும், ஸ்திரியும் தங்களுக்கு சந்தானமில்லாத மனக்குறை தீர புண்ணிய தலங்களுக்கு தீர்த்த யாத்ரை செய்து கொண்டே சென்றார்கள். பின்பு கடைசியில் பாலக்காடு தாலுகா ஓலவக்கோடு ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 12 மைலில் இருக்கும் " மங்களா" என்ற ரயில் நிலையத்தினருகில் "பாரதப்புழா" என்ற ஆற்றோரம் அமைந்துள்ள "புதுக்கோட்டப்பன்" என்ற ஆலயத்தில் வழிபாடு செய்துகொண்டு தங்கினர்.

அந்தக்கோயிலின் தர்மக்கர்த்தா இவர்களின் ஆசாரஅனுஷ்டா னங்களைப்பார்த்து அந்தக்கோயிலிலேயே பூஜை செய்துக்கொண்டு தங்கச்செய்துவிட்டார். அவர்களும் அங்கேயே பூஜைசெய்து கொண்டு கோமூத்ரத்தில் வேகவைத்த அன்னத்தை புசித்து பஜனம் இருந்தார்கள். ஆறுமாதத்திலேயே பரமேஸ்வரன் அருளால் அந்த ஸ்திரீக்கு கர்ப்பம் ஏற்பட்டு ஒருபுத்ரன் பிறந்தான். இவர் பெயர் ஸ்ரீவெங்கடேசன். இவர் தான் ஸ்ரீகுருநாதர் வம்சத்தின் மூலப்புருஷர். இந்த வம்சத்தில் தொடர்ந்து வந்தவர்களில் அய்யாக்குட்டி என்கிற ஸ்ரீவெங்கடேசன் என்பவர் ஒருவர். இவருடைய இளமையிலேயே மேற்படி தாய் தந்தையர் இறந்து விட்டனர். அதன்பின் வெங்கடேசன் என்கிற அய்யாக்குட்டி) 10 வயதில் தன் சிறிய

தாயார் கொடுமை தாங்காமல் வீட்டை விட்டு கிளம்பி, அங்காடிபுரம் என்ற ஊருக்கு 4 மைலில் இருக்கும். "ஆயிரம்நாழிக்கோயிலகம்" என்னும் ஓர்சிற்றரசின் அரண்மனையில் வேலைக்குச் சேர்ந்தார். இவர் ஒரு ஸூர்யோபாஸகர். மயூரகவியாலியற்றப்பட்ட **"மயூரசதகம்"** என்ற துதியைக் கூறி தினசரி சூர்ய நமஸ்காரம் செய்வது வழக்கம். அவ்வாறு நமஸ்காரம் செய்துவந்த பகவதி கோவிலருகில் உள்ள ஒரு பாறாங்கல்லில் நமஸ்காரம் செய்ததினால் ஏற்பட்ட பள்ளம் வடு இன்றும் இன்னும் இருக்கிறது. இவருக்கு குந்தனூர் ஸ்ரீஅப்புஜோஸ்யர் குமாரியான ஸ்ரீமதி தைலம்மை அம்மாளுடன் திருமணம் நடந்தது. (இந்த தைலம்மாளின் பாட்டனார் புலவர் பிச்சுவாத்யார் என்று பெயர். இவர் கூத்து மாடம் கட்டி ராமாயணம் போன்ற கதைகளை கூத்து நடத்துவார்.) சந்தரசேகரபுரம் என்ற ஊரில் இவர்களுக்கு முதலில் ஒரு பெண்ணும் அம்மணி என்கிற ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியம்மாள், பிறகு ஒரு குமாரனும் 'ஸ்ரீகிருஷ்ணசாஸ்திரி பிறந்தார்கள். பிறகு மூன்றாவதாக நமது வரலாற்று நாயகரான **ஸ்ரீஸ்வாமி**யும் தோன்றினார்கள். இவரது ஆரம்ப பெயர் **ஸ்ரீவெங்கடேசுவரஸ்வாமி** என்பது. இப்பெயர் பிற்காலத்தில் சுருங்கி **"ஸ்ரீஸ்வாமி"** என்றே நிலவியது.

முதலில் வம்சாவளி அட்டவணையின் துணையால் பரம்பரையை தெரிந்துகொள்ளலாம்.

**சிவம் + சக்தி (பஜனம் இருந்தவர்கள்)**
**சுமார் 300 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட வம்சாவளி.**
(பெயர் தெரியாததால் சிவம், சக்தி என்று குறிப்பிட்டிருக்கிறேன்)

வெங்கடேசன்
(மூல புருஷர்)

இவரின் பேரன்
வெங்கடேசன்

வீரராகவன்

வேங்கடகிருஷ்ணன்

வேங்கடசுப்ரமணியன்

வெங்கடேசன்

வெங்கடேசன் (எ)
அய்யாக்குட்டி+தைலம்மை

வீரமணி
பள்ளி ஆசிரியர்

சுப்புலஷ்மி
+
நாராயணன்

கிருஷ்ணசாஸ்திரி

**ஸ்ரீஸ்வாமிசாஸ்திரி**
**ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி**

ஸ்ரீC.V.
வெங்கடேசுவரன்
ஸ்ரீமதி சியாமளா

**AN ASTROLOGICAL TRUTH IS FLASHED HERE.**

The Constellations of KRITHIGAI ROHINI PUSHYAM HASTHA MOOLA SRAVANA & UTHRA BADHRAPADA are noted for experience that ensure one of being on the right track of LALITHOPASANA.

## 2. காலசக்ரம்

ஸ்வஸ்தி ஸ்ரீசார்வரி வருடம் கொல்லம் ஆண்டு 1075) (கி.பி. 1900) தை மாதம் தேதி 26 (07.02.1900) சுக்லபக்ஷ நவமிதிதி, ப்ரமயோகம். பவகரணம் புதன் கிழமை க்ருத்திகை நக்ஷத்ரம் 4ம் பாதம் விடியற்காலை 3.56 (IST) பரமாத்ம காலத்தில் சுப ஜனனம். ஜனனகாலத்தில் –சூர்ய தெசையில் பாக்கி 6 மாதம்

| | | | |
|---|---|---|---|
| சுக்ரன் | | சந்திரன்<br>ராகு | |
| | | | |
| சூர்யன்<br>செவ்வாய்<br>புதன்<br>குளிகன் | ராசி | | |
| ல<br>சனி | குரு<br>கேது | | |

இவர் பிறந்தவுடன் பெற்றோரும் உறவினர்களும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டார்கள். இவரது கண்களில் வீசும் ஒளி இவரது பிற்கால ப்ரகாசத்தை முன்கூட்டி, தெரிவிப்பது போல் இருந்தது. இவரது இளமையில் (அதாவது 1904 ம் ஆண்டில்) தந்தை காலமானார். தாயாரும் இவரது தாய்மாமன் க்ருஷ்ண ஜோஸ்யரும் இவரது போஷகர்களாக இருந்தனர். இந்த க்ருஷ்ண ஜோஸ்யருக்கு ஸந்ததிகள் இல்லை. எனவே இவருக்கு 9 வது வயதில் அவரே ப்ரஹ்மோபதேசமும் செய்துவைத்தார். இவ்வரலாறு எழுதிவரும்போது ஸ்ரீகுருநாதர் க்ருஹத்தில் கிடைத்ததும், அவரே கைப்பட 'என் முன்னோர் சரித்திரம்" என்று தலைப்பிட்டு எழுதிவைத்துள்ள குறிப்பிலிருந்தும் முன்கண்ட வம்சாவளி முதலியன எழுதினேன். பிறகு இனி எழுதும் அவரது இளமை நிகழ்ச்சிகள் அவரே எழுதியதை அவர் மொழியிலேயே அப்படியே இதில் நகல் செய்துள்ளேன்.

"கொடுந்திரபுள்ளி என்ற ஊரில் ஜோதிஷம் ராமய்யர் என்பவரிடத்திலும், வேங்கடாசல சாஸ்திரிகள் என்பவரிடத்திலும் காவ்யங்கள் சிலகாலம் வாசித்தேன். எனது 10 வயதிலிருந்தே சியாமளாதண்டகம், அபராதக்ஷமாபனஸ்தோத்ரம், மந்த்ரமாத்ருகா புஷ்பமாலாஸ்தவம், இவைகள் எனக்கு மனப்பாடம். இவைகளில் ஒன்றை ஸதா கூறிக் கொண்டே இருப்பேன். தூக்கத்தில் கூட இவைகளை உளருவேனாம். ஸந்யாஸிகளைக் கண்டால் சிச்ருஷை செய்வதில் ஆர்வம் அதிகம். ஏனெனில் இவர்கள் மோக்ஷதாதா என்பதால். பிறகு அவர்களிடம் விசேஷம் ஒன்றுமில்லையென்று கண்டால் விலகிவிடுகிறது. தமக்கை புருஷன் ஆதரவில் பிறகு இருந்தேன். அவரது குமாரன் ஒருவன் வேங்கடராமன் என்று பெயர், அவன் மிகுந்த அறிவாளி நன்றாகப் பாடுவான். அவனிடம் எனக்கு மிகுந்த ப்ரீதி. அவன் திடீரென்று ஒரு நாள் இறந்து விட்டான். அதுமுதல் எனக்கு பைத்தியம் பிடித்த மாதிரி ஆகிவிட்டது. எனக்கு கை கால் சில சமயம் விளங்காது. காதும் சில சமயம் கேட்காது. கண்களும் சிலசமயம் தெரியாது. ஆனால் ஸ்ரீலலிதாசஹஸ்ரநாமம், ஸ்ரீதேவிமஹாத்மியம் இவைகள் மனப்பாடம். இவ்வாறு சிலகாலம் அனுபவம். ஒருசமயம் படுத்த படுக்கை. ஓர் இரவு ஒரு கனவில் அதில் ஒரு பெரியவர் வந்து "நாளை மறுதினம் 12 மணிக்கு நீ இறந்து விடுவாய்" என்று என்னிடம் சொல்கிறார்.

இந்தக் கனவை என் மாமன், தாய் இவர்களிடத்தில் சொன்னவுடன் தாய் மிகுந்த மனக்கவலை அடைந்தாள். அந்த நிமிஷம் முதல் என் அருகில் உட்கார்ந்து ஜலபானம் கூட செய்யாது, அகோராத்ரீ ஸர்வ லோக ஜனனியான அம்பாளை வேண்டி லலிதா ஸஹஸ்ரநாமத்தை தொடர்ந்து பாராயணம் செய்து வந்தாள். அதேபோல் குறிப்பிட்ட தினம் மதியம் 12 மணிக்கு எனக்கு எல்லாம் அடங்கிவிட்டது. ஆனால் தாயார் மட்டும் உறுதியாக ஜபத்தில் இருந்தாள். சரியாக 3 மணிக்கு நான் நல்ல நினைவில் உடலில் எவ்வித உபத்ரவமும் இல்லாமல் சௌக்யமாக எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினேன்".

இதுவரை அவர்கள் எழுதியவற்றிலிருந்து படித்தோம். இனி பாடமும் ஜோதிஷமும் மாமனிடமே கற்றார்கள். "கடபயாதி " என்ற எண் கணிதகலையில் இவர் வல்லுனராக திகழ்ந்தவர்கள். மாமனிடமே ஸ்ரீபஞ்சதசாக்ஷரி மந்தரமும் உபதேசமாக பெற்றார்.

இவ்விடத்தில் "கடபயாதி" சாஸ்த்ரம் என்றால் என்ன என்பதை சிறிது பார்ப்போம்.

## 3. எண் கணிதம்

முற்காலத்தில் இப்போது போன்று அச்சு இயந்திரம் இருக்கவில்லை. புத்தகங்களும் பக்திஞான, தர்ம சாஸ்திரங்களும் புராண இதிஹாஸங்கள் எதுவானாலும் ஸ்லோகங்கள் வடிவில்தான் இருக்கும். வசன நடை மிகக் குறைவு. இதனால் மனப்பாடமாக நினைவில் வைத்திருப்பது எளிது. மேலும் விக்ஞானம், கணிதம், பரதம், வாஸ்து, காமசாஸ்திரம் இவைகள் கூட ஸ்லோக ரூப மாகவேதான் ஏன்? அகராதி கூட ஸ்லோகம் தான். எனவே இந்த "கடபயாதி" என்ற ஸங்க்யா சாஸ்திரத்தின் மூலம் ஒவ்வொரு எண்ணுக்கும் எழுத்துக்களின் மூலம் ஸங்கேதம் கொடுத்தார்கள். இந்த அக்ஷரங்கள் சேர்ந்த வார்த்தையைப் பார்த்தால் – பொதுவில் அது வார்த்தை போலிருக்கும். ஆனால் இக்கணக்கின்படி அது ஒரு எண். க.ட.ப,ய என்ற

அக்ஷரங்களில் ஆரம்பித்து இக்கணக்கு செய்வதால் 'கடபயாதிஸங்க்யை – "என்று பெயர். இது ஸூத்ர ரூபத்தில் சொல்வார்கள்.

காதிநவ டாதி நவ, பாதி பஞ்ச, யாத்யஷ்டௌ !
நேத்ரே சூன்யம், ஞேயம் அங்கானாம் வாமதோகதி: ‼

கீழ்க்காணும் பட்டியல் இதனை புரிவிக்கும்.

| Sankya | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| KA Table | KA | KKA | GA | GGA | GNA | CHA | CHHA | JA | JJA | JNA |
| TA Table | TA | TTA | DA | DDA | NA | THA | THHA | DHA | DDHA | NNA |
| PA Table | PA | PPA | BA | BBA | MA | | | | | LLA |
| YA Table | YA | RA | LA | VA | SSA | SHA | SA | HA | | KSHA |

अ முதல் अः வரையிலான உயிரெழுத்து 16 க்கும் 0 தான்.

உதாரணம் : ராம : (राम) र = 2, म = 5 இதனை வாசிக்கும்போது 52 என்று வாசிக்க வேண்டும்.

இந்த கலையைக் கொண்டு குருநாதர் அவர்கள் பிற்காலத்தில் ஸ்ரீவித்யா பரமான அனேக வேதாந்த தத்வ ரஹஸ்யங்களை விளக்கியிருக்கிறார்.

## 4. ஆன்ம நாட்டம்

இவருக்கு இயற்கையாகவே அம்பாள் பக்தி இருந்தது. இதனால் அவருக்கு ஸ்ரீவித்யா உபாஸனையிலே நாட்டம் வெகுவாக இருந்தது.

உத்தமம் தத்வ சிந்தா ஜப சிந்தாது மத்யமா
அதமம் சாஸ்த்ர சிந்தாது லோக சிந்தாது அதமா தமம் ‼

என்று ஒரு ஸுபாஷித ஸ்லோமுண்டு. எனவே இதில் கண்டவாறு ஸதா தத்வ சிந்தனையிலேயே வாழ்க்கை ஓடியது. தத்வ தர்சனம்" என்பதே ஜீவப்ரஹ்ம ஐக்யம் தானே ! லக்ஷ்யம் – ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்யப்படுவது தான். அது உடனே நடக்கிற கார்யமில்லை. ஸமஸ்கார நிவ்ருத்தி, வாஸனாக்ஷயம் ஏற்பட எவ்வளவோ காலம் புடிக்கும். ஆனால் உடனே நடக்காவிட்டாலும் அதற்கான செயலை ஸாதனையை உடனே தொடங்கிவிடவேணும், தள்ளிப்போட போட அழுக்கு தடித்துக் கொண்டே போகும். எனவே நல்லதை உடனே செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஸ்வாமிக்கு ஏற்பட்டது.